www.Padasalai.Net www.TrbTnpsc.com

**11 - ஆம் வகுப்பு** **அரையாண்டுத் தேர்வு — 2023 - 2024**

Time : 1.30 Hrs **பொருளியல்** மதிப்பெண்கள் : 100

**சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் :** **100 X 1 = 100**

1. பொருளாதாரத்தில் நாம் படிக்கும் அடிப்படை பிரச்சினை
   (அ) எண்ணற்ற விருப்பங்கள் (ஆ) அளவற்ற வளங்கள்
   (இ) பற்றாக்குறை (ஈ) நம் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான உத்தி
2. சமநிலை விலை என்பது அந்த் விலையில்
   (அ) எல்லாம் விற்கப்படுகிறது (ஆ) வாங்குபவர்கள் பணத்தை செலவிடுகின்றனர்
   (இ) தேவையின் அளவும் அளிப்பின் அளவும் சமம் (ஈ) மிகைத்தேவை பூஜ்ஜியம்
3. .பொருளாதாரத்தின் தந்தை யார்? -
   (அ) மாக்ஸ் முல்லர் (ஆ) ஆடம் ஸ்மித் (இ) கார்ல் மார்க்ஸ் (ஈ) பால் அ சாமுவேல்சன்
4. பயன்பாடு என்பது -
   (அ) தேவையும் அளிப்பும் சமமாக இருக்கும் சமநிலைப்புள்ளி
   (ஆ) மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் சக்தி
   (இ) பண்டங்களின் மொத்த மதிப்பு (ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான விருப்பம்
5. வளர்ச்சி இலக்கணம் என்பது –
   (அ) இயங்குநிலை பொருளாதார கட்டமைப்பில் தேர்ந்தெடுப்பதில் உள்ள பிரச்சனை
   (ஆ) எண்ணற்ற வளங்கள் மற்றும் விருப்பங்களுக்கான பிரச்சனையாகும்
   (இ) செல்வத்தை உற்பத்தி செய்வது மற்றும் பகிர்வது
   (ஈ) மனிதர்களின் பருப்பொருள் சார்ந்த நலன்
6. பொதுவாக எந்தக் கோட்பாடு நுண்ணியல் பொருளாதாரத்தை உள்ளடக்கியது?
   (அ) விலைக் கோட்பாடு (ஆ) வருமானக் கோட்பாடு
   (இ) வேலைவாய்ப்புக் கோட்பாடு (ஈ) வணிகக் கோட்பாடு
7. தனிக்கருத்திலிருந்து பொதுக்கருத்து பெறும் முறை
   (அ) பகுத்தாய்வு முறை (ஆ) தொகுத்தாய்வு முறை
   (இ) இயல்புரை அறிவியல் (ஈ) நெறியுரை அறிவியல்.
8. விற்பனை செய்யும் பொருட்களை எதனால் பெருக்கினால் மொத்த வருவாய் கிடைக்கும்?
   (அ) விலை (ஆ) மொத்தச் செலவு (இ) இறுதி சமநிலை வருவாய் (ஈ) இறுதி சமநிலை செலவு
9. இயல்பெண் பயன்பாட்டு ஆய்வை வழங்கியதில் முதன்மையானவர்
   (அ) ஜே.ஆர். ஹிக்ஸ் (ஆ) ஆர்.ஜி.டி. ஆலன் (இ) மார்ஷல் (ஈ) ஸ்டிக்லர்
10. இறுதிநிலை பயன்பாடு பூஜ்யமாக இருக்கும்போது மொத்தப் பயன்பாடு ..................
    (அ) குறைவாக (ஆ) உச்சமாக (இ) பூஜ்ஜியமாக (ஈ) எதிர்மறையாக
11. .காஸன் முதல்விதி .................... என்றும் அழைக்கப்படுகின்றது
    (அ) சம இறுதிநிலை பயன்பாட்டு விதி (ஆ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி
    (இ) தேவை விதி (ஈ) குறைந்து செல் விளைவு விதி
12. சமநோக்கு வளைகோட்டின் அடிப்படையானது ..................
    (அ) தரவரிசை ஆய்வு (ஆ) இயல்பெண் ஆய்வு
    (இ) பண்பளவை ஆய்வு (ஈ) உளவியல் ஆய்வு
13. தேவை நெகிழ்ச்சி என்ற கருத்தை அறிமுகப்படுத்தியவர் ....................
    (அ) பெர்கூசன் (ஆ) கீன்ஸ் (இ) ஆடம் ஸ்மித் (ஈ) மார்ஷல்
14. கீழ்க்காணும் எவற்றால் தேவை அதிகரிக்கும்?
    (அ) வரி அதிகரிப்பதால் (ஆ) அதிக மானியம் வழங்குவதால்
    (இ) வட்டி வீதம் அதிகரிப்பதால் (ஈ) மக்கள் தொகை குறைவதால்
15. நுகர்வோர் சமநிலையில் இருக்கும்போது இறுதிநிலை பயன்பாடானது .................. இருக்கும்.
    (அ) குறைவாக (ஆ) எதிர்மறை (இ) சமமாக (ஈ) கூடுதலாக
16. சாதாரண தரவரிசைப் பயன்பாட்டை எவ்வாறு அளவிடலாம்?
    (அ) தரப்படுத்துதல் (ஆ) எண்ணிக்கைப் படுத்துதல் (இ) வார்த்தைப்படுத்துதல் (ஈ) எதுவுமில்லை
17. முதன்மை உற்பத்திக் காரணிகளாவன.
    (அ) உழைப்பு மற்றும் தொழிலமைப்பு (ஆ) உழைப்பு மற்றும் மூலதனம்
    (இ) நிலம் மற்றும் மூலதனம் (ஈ) நிலம் மற்றும் உழைப்பு
18. சராசரி உற்பத்தி(AP)யைக் கணக்கிடப் பயன்படும் விகிதம்
    (அ) $\Delta TP / N$ (ஆ) $\Delta TP / \Delta N$ (இ) $TP / MP$ (ஈ) $TP / N$
19. ஒரு நிறுவனத்தின் உள்ளீடு வெளியீடுகளுக்கு இடையேயுள்ள இயல்பான தொடர்பைத் தருவது எது?
    (அ) நுகர்வுச் சார்பு (ஆ) உற்பத்தி சார்பு (இ) சேமிப்பு சார்பு (ஈ) முதலீட்டு சார்பு
20. சம உற்பத்தி கோட்டின் வேறு பெயர்
    (அ) நெகிழ்ச்சியற்ற அளிப்புக் கோடு (ஆ) நெகிழ்ச்சியற்ற தேவைக் கோடு
    (இ) சம-இறுதிநிலை பயன்பாடு (ஈ) சம உற்பத்தி வளைகோடு
21. காப் - டக்ளஸ் உற்பத்தி சார்பு எதனை அடிப்படையாகக் கொண்டது?
    (அ) வளர்ந்து செல் விகித விளைவு விதி (ஆ) குறைந்து செல் விகித விளைவு விதி
    (இ) மாறா விகித விளைவு விதி (ஈ) மேற்காணும் அனைத்தும்



www.Padasalai.Net
CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

22. கீழ்கண்டவற்றுள் எது நிலத்தின் சிறப்பியல்பு அல்ல?
(அ) குறை அளிப்பு (ஆ) இயங்கும் தன்மையுடையது (இ) பலவகைப்படும் (ஈ) இயற்கையின் கொடை
23. உற்பத்தியாளர் சமநிலையை அடையும் புள்ளி எது?
(அ) இறுதிநிலை தொழில் நுட்ப பதிலீட்டு வீதம்(MRTS) விலை வீதத்தை விட அதிகமாக இருந்தால்
(ஆ) (MRTS) விலை வீதத்தை விட குறைவானால்
(இ) (MRTS) ம் விலை வீதமும் சமமாக இருந்தால்
(ஈ) சம உற்பத்திக் கோடும் சம உற்பத்தி செலவுக் கோடும் வேறுபட்டிருந்தால்
24. உற்பத்தி சார்பு இவற்றிற்கிடையே உள்ள தொடர்பை விளக்குகிறது.
(அ) உள்ளீட்டு விலைக்கும் வெளியீட்டு விலைக்கும் இடையே உள்ள தொடர்பு
(ஆ) உள்ளீட்டு விலைக்கும் வெளியீட்டின் அளவிற்கும் இடையே உள்ள தொடர்பு
(இ) உள்ளீட்டு அளவிற்கும் வெளியீட்டு அளவிற்கும் இடையே உள்ள தொடர்பு
(ஈ) உள்ளீட்டு அளவிற்கும் உள்ளீட்டின் விலைக்கும் இடையே உள்ள தொடர்பு
25. செலவு என்பது (அ) விலை (ஆ) மதிப்பு (இ) மாறாச் செலவு (ஈ) உற்பத்தி
26 .வெளியுறு செலவுகள் என்பது
(அ) கையிலிருந்து செய்யும் செலவுகள் (ஆ) உண்மைச் செலவுகள்
(இ) சமூகச் செலவு (ஈ) மூழ்கும் செலவுகள்
27. தனக்கு சொந்தமான வளங்களை நிறுவனத்திற்கு செய்யும் செலவு
(அ) உண்மைச் செலவு (ஆ) வெளியுறு செலவு (இ) பணச் செலவு (ஈ) உள்ளுறு செலவு
28. ஒரு அலகு கூடுதலாக உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவு
(அ) மாறும் செலவு (ஆ) மாறாச் செலவு (இ) இறுதிநிலைச் செலவு (ஈ) மொத்தச் செலவு
29. ஒரு அலகு உற்பத்திக்கான செலவு ........... செலவாகும்
(அ) சராசரி (ஆ) இறுதிநிலை (இ) மாறும் (ஈ) மொத்த
30. மொத்த மாறாச் செலவு 100 மொத்த மாறும் செலவு 125 எனில், மொத்தச் செலவைக் கணக்கிடுக.
(அ) 125 (ஆ) 175 (இ) 225 (ஈ) 325
31. பொருட்களின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் ..................... வருவாயாகும்.
(அ) இலாபம் (ஆ) மொத்த (இ) சராசரி (ஈ) இறுதிநிலை
32. விலை நிலையாக இருக்கும்போது AR கோடு, MR கோட்டுக்கு ..................... ஆக இருக்கும்.
(அ) சமமாக (ஆ) அதிகமாக (இ) குறைவாக (ஈ) தொடர்பற்று
33. நிறுவனத்தின் சமநிலை என்பது
(அ) MC = MR (ஆ) MC > MR (இ) MC < MR (ஈ) MR=Price
34. முற்றுரிமை நிறுவனம் குறுகிய காலத்தில் ............... பெறும்
(அ) இயல்பு இலாபம் (ஆ) நஷ்டம் (இ) அதிக இலாபம் (ஈ) அதிக நஷ்டம்
35. எப்போது நிறுவனம் இலாபம் பெற முடியும்
(அ) TR < TC (ஆ) TR – MC (இ) TR > TC (ஈ) TR = TC
36. விலையின் மற்றொரு பெயர்
(அ) சராசரி வருவாய் (ஆ) இறுதிநிலை வருவாய் (இ) மொத்த வருவாய் (ஈ) சராசரி செலவு
37. குழுச்சமநிலை ஆராய்வது .......................
(அ) முற்றுரிமை போட்டி (ஆ) முற்றுரிமை (இ) இருவர் முற்றுரிமை (ஈ) தூய போட்டி
38. விலை தலைமை அம்சம் கொண்டது .....................
(அ) நிறைவு போட்டி (ஆ) முற்றுரிமை (இ) சில்லோர் முற்றுரிமை (ஈ) முற்றுரிமையாளர் போட்டி
39. நிறைவுப் போட்டியில் நிறுவனத்தின் தேவைக்கோடு .................
(அ) நிலையானது (ஆ) படுகிடை (இ) எதிர்மறை சரிவு (ஈ) நேர்மறை சரிவு
40. விற்பனை செலவிற்கு உதாரணம் .....................
(அ) கச்சாப்பொருள் விலை (ஆ) போக்குவரத்துச் செலவு
(இ) விளம்பர செலவு (ஈ) கொள்முதல் செலவு
41. பகிர்வுக் கோட்பாடு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
(அ) உற்பத்தி விலைக் கோட்பாடு (ஆ) காரணி விலைக் கோட்பாடு
(இ) கூலிக்கோட்பாடு (ஈ) வட்டிக்கோட்பாடு
42. எதனைப் பயன்படுத்துவதற்கான வெகுமதியே வாரம் ஆகும்?
(அ) மூலதனம் (ஆ) உழைப்பாளி (இ) நிலம் (ஈ) அமைப்பு
43. நிலத்திற்கு உண்மையானதும் அழிக்க முடியாத சக்தியும் உள்ளது என்ற கருத்தைப் பயன்படுத்தியவர்
(அ) J S மில் (ஆ) வாக்கர் (இ) கிளார்க் (ஈ) ரிக்கார்டோ
44. பணக்கூலியின் வேறுபெயர்
(அ) உண்மைக் கூலி (ஆ) பெயரளவுக் கூலி (இ) சரியானக் கூலி (ஈ) மாற்றுக் கூலி
45. முதலீட்டை பயன்படுத்துவதற்கான வெகுமதி
(அ) வாரம் (ஆ) கூலி (இ) இலாபம் (ஈ) வட்டி
46. எதிர்பாராத செலவுகள் என்ற கருத்தை கீன்ஸ் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.
(அ) பரிமாற்ற நோக்கம் (ஆ) முன்னெச்சரிக்கை நோக்கம்
(இ) ஊக நோக்கம் (ஈ) தனிப்பட்ட நோக்கம்
47. போலிவாரம் இதனால் தோன்றுகிறது
(அ) மனிதன் உருவாக்கிய உபகரணங்கள் (ஆ) வீட்டில் தயார் செய்தவை
(இ) இறக்குமதிப் பொருட்கள் (ஈ) எதுவுமில்லை
48. கடன் நிதி வட்டிக் கோட்பாடானது .......................
(அ) தொன்மைக் கோட்பாடு (ஆ) நவீன கோட்பாடு
(இ) மரபுக் கோட்பாடு (ஈ) புதிய தொன்மைக் கோட்பாடு



CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

49. கர்நாடகத்தின் முக்கிய தங்கச்சுரங்கப்பகுதி ................
(அ) கோலார் (ஆ) இராமகிரி (இ) அனந்தபூர் (ஈ) கொச்சின்
50. வலுவான பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள் வரிசையில் இந்தியாவின் இடம்
(அ) நான்கு (ஆ) ஏழு (இ) ஐந்து (ஈ) பத்து
51. இந்தியப் பொருளாதாரம் ................ காரணமாக வலிமையின்மையாக இருக்கிறது
(அ) பொருளாதாரச் சமநிலையின்மை (ஆ) கலப்புப் பொருளாதாரம்
(இ) நகரமயமாதல் (ஈ) போதுமான வேலை வாய்ப்புகள் இருப்பது
52. மக்கள் தொகையின் இயல்புகளைப் பற்றிய அறிவியல் ரீதியான ஆய்வு
(அ) இட அமைப்பியல் (ஆ) மக்கள் தொகையியல் (இ) புவியியல் (ஈ) தத்துவவியல்
53. ஆயிரம் மக்களுக்கு இறப்பவர் எண்ணிக்கை என்பது ..................
(அ) கச்சா இறப்பு வீதம் (ஆ) கச்சா பிறப்பு வீதம்
(இ) கச்சா சிசு வீதம் (ஈ) மகப்பேறு இறப்பு வீதம்
54. மக்கள் தொகை அடர்த்தி என்பது
(அ) நிலத்தின் அளவு / மக்கள் தொகை (ஆ) நிலத்தின் அளவு / வேலை வாய்ப்பு
(இ) மக்கள் தொகை / குறிப்பிட்ட நில அளவு (ஈ) மக்கள் தொகை / வேலை வாய்ப்பு
55. ஜனநாயக சமதர்மத்தைக் கொண்டு வந்தவர் .........
(அ) ஜவஹர்லால் நேரு (ஆ) P.C. மஹலநோபிஸ்
(இ) டாக்டர் இராஜேந்திர பிரசாத் (ஈ) இந்திரா காந்தி
56. இந்த கொள்கையின் அடிப்படையில் காந்தியப் பொருளாதாரம் இயங்குகிறது.
(அ) சமதர்ம சிந்தனை (ஆ) ஒழுக்க நெறி அடிப்படை
(இ) கோபால கிருஷ்ண கோகலே (ஈ) தாதாபாய் நௌரோஜி
57. இந்தியாவை ஆளும் உரிமை கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து ஆங்கிலேய அரசுக்கு மாற்றப்பட்ட ஆண்டு
(அ) 1885 (ஆ) 1858 (இ) 1868 (ஈ) 1878
58. இரயத்வாரி முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட இடம்
(அ) கேரளா (ஆ) வங்காளம் (இ) தமிழ்நாடு (ஈ) மகாராஷ்டிரா
59. 1956-ன் தொழிற்கொள்கையின் நோக்கம்
(அ) பெரிய நிறுவனங்களை முன்னேற்றுவது (ஆ) வேளாண்துறையை மட்டும் முன்னேற்றுவது
(இ) தனியார் துறையை மட்டும் முன்னேற்றுவது (ஈ) குடிசைத் தொழில்களை மட்டும் முன்னேற்றுவது
60. இந்தியாவின் பசுமைப் புரட்சியின் தந்தை என்றழைக்கப்படுபவர்
(அ) M.S. சுவாமிநாதன் (ஆ) காந்தி (இ) விஸ்வேஸ்வரையா (ஈ) N.R. விஸ்வநாதன்
61. 1969-ல் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை
(அ) 10 (ஆ) 12 (இ) 14 (ஈ) 16
62. திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு
(அ) 1950 (ஆ) 1955 (இ) 1960 (ஈ) 1952
63. பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட காலம்
(அ) 1992 – 1997 (ஆ) 2002 – 2007 (இ) 2007 – 2012 (ஈ) 1997 – 2002
64. இந்தியாவின் மிகப்பழமையான பெரிய அளவிலான தொழில்
(அ) பருத்தி (ஆ) சணல் (இ) இரும்பு (ஈ) சிமெண்ட்
65. FDI என்பதன் விரிவாக்கம்
(அ) வெளிநாட்டு தனியார் முதலீடு (ஆ) வெளிநாட்டு தொகுப்பு முதலீடு
(இ) வெளிநாட்டு நேரடி முதலீடு (ஈ) வெளிநாட்டு செலாவணி தனியார் முதலீடு
66. சிறப்பு பொருளாதார மண்டலக் கொள்கை ....................... வெளியிடப்பட்டது.
(அ) ஏப்ரல் 2000ல் (ஆ) ஜூலை 2000ல் (இ) ஏப்ரல் 2001ல் (ஈ) ஜூலை 2001ல்
67. விவசாய உற்பத்தி அங்காடிக்குழு ................. ஆகும்.
(அ) ஆலோசனைக் குழு (ஆ) சட்டபூர்வமான குழு (இ) அ மற்றும் ஆ (ஈ) எதுவுமில்லை
68. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி என்பது ................
(அ) ஒருமுனை வரி (ஆ) அடுக்கடுக்கு விளைவுகளைக் கொண்டது
(இ) மதிப்பு கூட்டப்பட்ட வரி போன்றது (ஈ) ஒரு முனை வரி மற்றும் அடுக்கு விளைவுகளற்றது.
69. புதிய வெளிநாட்டு வர்த்தக கொள்கை ......... ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது
(அ) 2000 (ஆ) 2002 (இ) 2010 (ஈ) 2015
70. பண்டங்கள் மற்றும் பணிகள் வரிச் சட்டம் ........................ அமல்படுத்தப்பட்டது.
(அ) 2017 ஜூலை 1ந் தேதி (ஆ) 2016 ஜூலை 1ந் தேதி
(இ) 2017 ஜனவரி 1ந் தேதி (ஈ) 2016 ஜனவரி 1ம் தேதி
71. ............ ம் ஆண்டு நிதி தொடர்பான நரசிம்மம் குழுவின் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.
(அ) 1990 (ஆ) 1991 (இ) 1995 (ஈ) 2000
72. இந்தியாவில் முதல் சிறப்புப் பொருளாதார மண்டலம் .............. ஏற்படுத்தப்பட்டது.
(அ) மும்பையில் (ஆ) சென்னையில் (இ) காண்ட்லாவில் (ஈ) கொச்சியில்
73. ராஜ் கிருஷ்ணாவால் வார்க்கப்பட்ட "இந்து வளர்ச்சி வீதம்" என்பது .......... குறிக்கும்
(அ) குறைவான பொருளாதார வளர்ச்சியை (ஆ) இந்து மக்கள் தொகையின் அதிகமான விகிதத்தை
(இ) நிலையான GDP யை (ஈ) எதுவுமில்லை
74. எது ஊரக பகுதியை கண்டறியும் பண்பு?
(அ) குறைந்த மக்கள் தொகை அடர்த்தி (ஆ) அதிக மக்கள் தொகை அடர்த்தி
(இ) குறைந்த இயற்கை வளம் (ஈ) குறைந்த மனித வளம்



CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

75. 2011 கணக்கெடுப்பின் மொத்த மக்கள் தொகையில் ஊரகத்தில் வாழும் மக்கள் தொகை சதவீதம் என்ன?
(அ) 40 (ஆ) 50 (இ) 60 (ஈ) 70
76. இரண்டு முற்றிலும் வேறுபட்ட தன்மைகளை தொடர்பு படுத்தி குறிப்பது
(அ) நுட்பம் (ஆ) சார்ந்திருப்பு (இ) இரட்டை தன்மை (ஈ) சமமின்மை
77. ஊரகப் பகுதியில் ஒரு மனிதன் எடுத்துக்கொள்ள வேண்டிய கலோரி அளவு
(அ) 2100 (ஆ) 2200 (இ) 2300 (ஈ) 2400
78. ஊரக தொழிற்சாலைக்கான உதாரணம் தருக.
(அ) சர்க்கரை ஆலைத்தொழில் (ஆ) பாய் தயாரிக்கும் தொழில்
(இ) சிமெண்ட் தொழில் (ஈ) காகிதத் தொழில்
79. இந்தியாவில் உள்ள ஊரக குடும்பங்களில் கடனாளிகளின் பங்கு எவ்வளவு?
(அ) பாதியளவு (ஆ) நான்கில் ஒரு பங்கு (இ) மூன்றில் இரண்டு பங்கு (ஈ) நான்கில் மூன்று பங்கு
80. MUDRA வங்கி அமுல்படுத்தப்பட்ட ஆண்டை குறிப்பிடுக -
(அ) 2000 (ஆ) 2005 (இ) 2010 (ஈ) 2015
81. தேசிய ஊரக சுகாதாரப்பணி அமுல்படுத்தப்பட்ட ஆண்டை குறிப்பிடுக –
(அ) 2000 (ஆ) 2005 (இ) 2010 (ஈ) 2015
82. "இந்திய விவசாயி கடனாளியாக பிறந்து, கடனாளியாக வாழ்ந்து, கடனாளியாக இறந்து கடனையே சந்ததிக்கு விட்டுச் செல்கிறான்" - இச்சொற்றொடரைக் கூறியவர் யார்?
(அ) ஆடம் ஸ்மித் (ஆ) காந்தி (இ) அமர்த்தியா சென் (ஈ) சர் மால்கம் டார்லிங்.
83. தமிழ்நாடு எதில் வளமானது?
(அ) வன வளம் (ஆ) மனித வளம் (இ) கனிம வளம் (ஈ) மேற்கூறிய அனைத்தும்
84. நீர்பாசனத்தின் முக்கிய ஆதாரம்
(அ) அணைக்கட்டுகள் (ஆ) கால்வாய்கள் (இ) கிணறுகள் (ஈ) குளங்கள்
85. கீழுள்ள நகரங்களில் எதில் சர்வதேச விமான நிலையம் இல்லை?
(அ) மதுரை (ஆ) திருச்சி (இ) தூத்துக்குடி (ஈ) கோயம்புத்தூர்
86. எந்த பயிர் உற்பத்திக்காக அதிகப் பரப்பு நிலம் பயன்படுத்தப்படுகிறது?
(அ) நெல் (ஆ) கரும்பு (இ) நிலக்கடலை (ஈ) தேங்காய்
87. எம்மாவட்டத்தில் குழந்தைப் பாலின விகிதம் குறைவாகவுள்ளது?
(அ) மதுரை (ஆ) தேனி (இ) அரியலூர் (ஈ) கடலூர்
88. தமிழ்நாட்டு உள்நாட்டு உற்பத்தியில் அதிக பங்கு வகிப்பது
(அ) வேளாண்மை (ஆ) தொழில் துறை (இ) சுரங்கம் (ஈ) பணிகள்
89. TICEL ன் பகுதி
(அ) இரப்பர் பூங்கா (ஆ) ஜவுளி பூங்கா (இ) உணவு பூங்கா (ஈ) உயிரி பூங்கா
90. சிமெண்ட் உற்பத்தியில் தமிழ்நாடு இந்தியாவில் எந்த நிலையில் உள்ளது?
(அ) மூன்றாம் (ஆ) நான்காம் (இ) முதல் (ஈ) இரண்டாம்
91. தென்னக இரயில்வேயின் தலைமையிடம்
(அ) திருச்சி (ஆ) சென்னை (இ) மதுரை (ஈ) கோயம்புத்தூர்
92. ................ இவற்றின் ஒருங்கிணைப்பே கணிதவியல் பொருளாதாரம் எனப்படும்
(அ) கணிதம் மற்றும் பொருளாதாரம் (ஆ) பொருளாதாரம் மற்றும் புள்ளியியல்
(இ) பொருளாதாரம் மற்றும் சமன்பாடுகள் (ஈ) வரைபடங்கள் மற்றும் பொருளாதாரம்
93. பொருளியலில் கணிதத்தை முதன்முதலாக பயன்படுத்தியவர் ......................
(அ) சர் வில்லியம் பெட்டி (ஆ) ஜியோவானி செவா (இ) ஆடம் ஸ்மித் (ஈ) இர்விங் பிஷர்
94. சாராத மாறியின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் காரணமாக சார்ந்த மாறியின் மதிப்பில் ஏற்படும் கூடுதல் முறை மாற்றம் ........................ எனப்படும்.
(அ) சாய்வு விகிதம் (ஆ) வெட்டு (இ) மாறுபாடு (ஈ) மாறிலி
95. $D = 50 - 5P$ எனக் கொள்க. $D = 0$ எனில், P ன் மதிப்பு
(அ) $P = 10$ (ஆ) $P = 20$ (இ) $P = 5$ (ஈ) $P = -10$
96. ஒரு அணியின் அணிக்கோவை மதிப்பு $\Delta = 0$ என்றால் அச்சார்புகளுக்கு தீர்வு ....................
(அ) உண்டு (ஆ) கிடையாது (இ) எண்ணிலி ( infinity ) (ஈ) பூஜ்யம்
97. நிலையான மதிப்பின் வகையீட்டுக்கெழு மதிப்பு ............... ஆகும்.
(அ) ஒன்று (ஆ) பூஜ்யம் (இ) எண்ணிலி ( infinity ) (ஈ) எண்ணிலியல்ல
98. $x^n$ என்பதன் வகையீட்டுக்கெழு ............. ஆகும்.
(அ) $nx^{(n-1)}$ (ஆ) $nx^{(n+1)}$ (இ) பூஜ்யம் (ஈ) ஒன்று
99. தேவை நெகிழ்ச்சி ........ உள்ள விகிதம் ஆகும்.
(அ) இறுதிநிலை தேவைச் சார்பிற்கும் வருவாய் சார்பிற்கும்
(ஆ) இறுதிநிலை தேவைச் சார்பிற்கும் சராசரி தேவைச் சார்பிற்கும்
(இ) நிலையான மற்றும் மாறும் வருவாய்
(ஈ) இறுதிநிலை தேவைச் சார்பிற்கும் மொத்த தேவைச் சார்பிற்கும்
100. Ctrl + M என்ற ஆணை .............. பயன்படுத்தப்படுகின்றது.
(அ) சேமிக்க (ஆ) நகலெடுக்க (இ) புதிய நழுமத்தைப் பெற (ஈ) நழுமத்தை நீக்க



CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

# Economics _2024-01-31_key

| Q No | Correct | Q No | Correct |
|---|---|---|---|
| ஒரு மதிப்பெண் தேர்வு - 2023-2024 | | 53 | அ |
| 1 | இ | 54 | இ |
| 2 | இ | 55 | அ |
| 3 | ஆ | 56 | ஆ |
| 4 | ஆ | 57 | ஆ |
| 5 | அ | 58 | இ |
| 6 | அ | 59 | அ |
| 7 | ஆ | 60 | அ |
| 8 | அ | 61 | இ |
| 9 | இ | 62 | அ |
| 10 | ஆ | 63 | ஆ |
| 11 | ஆ | 64 | அ |
| 12 | அ | 65 | இ |
| 13 | FF | 66 | அ |
| 14 | ஆ | 67 | ஆ |
| 15 | இ | 68 | FF |
| 16 | அ | 69 | FF |
| 17 | FF | 70 | அ |
| 18 | FF | 71 | ஆ |
| 19 | ஆ | 72 | இ |
| 20 | FF | 73 | அ |
| 21 | இ | 74 | அ |
| 22 | ஆ | 75 | இ |
| 23 | இ | 76 | இ |
| 24 | இ | 77 | FF |
| 25 | FF | 78 | ஆ |
| 26 | அ | 79 | FF |
| 27 | FF | 80 | FF |
| 28 | இ | 81 | ஆ |
| 29 | அ | 82 | FF |
| 30 | இ | 83 | ஆ |
| 31 | ஆ | 84 | இ |
| 32 | அ | 85 | இ |
| 33 | அ | 86 | அ |
| 34 | இ | 87 | இ |
| 35 | இ | 88 | FF |
| 36 | அ | 89 | FF |
| 37 | அ | 90 | அ |
| 38 | இ | 91 | ஆ |
| 39 | ஆ | 92 | அ |
| 40 | இ | 93 | ஆ |
| 41 | ஆ | 94 | அ |
| 42 | இ | 95 | அ |
| 43 | FF | 96 | ஆ |
| 44 | ஆ | 97 | ஆ |
| 45 | FF | 98 | அ |
| 46 | ஆ | 99 | ஆ |
| 47 | அ | 100 | இ |
| 48 | FF | | |
| 49 | அ | | |
| 50 | ஆ | | |
| 51 | அ | | |
| 52 | ஆ | | |

www.Padasalai.Net